**செ.வெ.எண்: 43** **நாள்: 15.03.2017**

# பத்திரிகைச்செய்தி

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் 2016-2017-ஆம் ஆண்டுக்கான மார்ச் 2017-ம் மாத மாவட்ட அளவிலான மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள் 22.03.2017 அன்று புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டரங்கத்திடலில் தடகளம், கையுந்துபந்து (ஆடவர் மற்றும் மகளிர்), கூடைப்பந்து (ஆடவர் மற்றும் மகளிர்) மற்றும் நீச்சல் ஆகிய விளையாட்டுகளில் கீழ்க்காணும் நிகழ்வுகளில் நடத்தப்படவுள்ளது.

தடகள விளையாட்டுப் போட்டிகள் ஆடவர் மற்றும் மகளிருக்கு 100 மீ, 400 மீ, 1500 மீ, நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், குண்டு எறிதல் மற்றும் தட்டு எறிதல் ஆகிய விளையாட்டு நிகழ்வுகளிலும், கையுந்துபந்து மற்றும் கூடைப்பந்து குழு விளையாட்டுப் போட்டிகள் ஆடவர் மற்றும் மகளிருக்கும், நீச்சல் விளையாட்டுப் போட்டிகள் ஆடவர் மற்றும் மகளிருக்கு 50மீ Free style, 100மீ Free style, 200மீ Free style, 400மீ Free style, 50மீ Breast Stroke, 50மீ Back stroke, 50மீ Butterfly மற்றும் 200மீ IM ஆகிய விளையாட்டு நிகழ்வுகளில் நடத்தப்படவுள்ளது.

போட்டிகளில் கலந்து கொள்வதற்கான தகுதிகள்: போட்டிகளில் கலந்து கொள்ள வயது வரம்பு கிடையாது. தடகளம் மற்றும் நீச்சல் விளையாட்டுப் போட்டிகளில் ஒருவர் ஒரு விளையாட்டு நிகழ்வில் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

மார்ச் 2017-ஆம் மாத மாதாந்திர போட்டிகளில் கலந்து கொள்ள விருப்பமுள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் 22.03.2017 அன்று காலை 8.00 மணிக்கு விளையாட்டரங்கத்திற்கு வந்து, புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களிடம் தங்களது பெயரினை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**